வணக்கம்

ஆல் இண்டியா ரேடியோ-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் மலர்விழி

தேதி 21.9.2023 நேரம் மாலை 6.10 மணி

-----------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

மகளிர் இடஒதுக்கீட்டு மசோதா மக்களவையில் நிறைவேற்றப் பட்டுள்ளதால், பெண்களுக்கு புதிய ஆற்றலும், நம்பிக்கையும் கிடைக்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

மகளிர் இடஒதுக்கீட்டு மசோதா இன்று மாநிலங்களவையில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

**சுதேசி தர்ஷன்** திட்டத்தின் கீழ் புதுச்சேரியில் அமலாகும் சுற்றுலா வளர்ச்சித் திட்டங்களை, மத்திய அமைச்சர் திரு கிஷன்ரெட்டி, இன்று, காணொளி காட்சி மூலம் ஆய்வு செய்தார்.

புதுச்சேரியில், 10 சதவிகித இடஒதுக்கீட்டின் கீழ் மருத்துவக் கல்லூரியில் சேரும் அரசுப் பள்ளி மாணவர்களின் கல்விக் கட்டணத்தை அரசே செலுத்தும் என்று முதலமைச்சர் திரு ரங்கசாமி அறிவித்துள்ளார்.

மோடி

மகளிர் இடஒதுக்கீட்டு மசோதா மக்களவையில் நிறைவேற்றப் பட்டுள்ளதால், பெண்களுக்கு புதிய ஆற்றலும், நம்பிக்கையும் கிடைக்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். மக்களவையில் இன்று அலுவல்கள் தொடங்கிய உடன் அவர் பேசுகையில், அரசின் இந்த புதிய முடிவினால், நாடு

புதிய உயரங்களை எட்டும் என்றார். மகளிர் இடஒதுக்கீட்டு மசோதாவை நிறைவேற்றுவதில் ஆதரவு அளித்த அனைத்துக் கட்சிகளுக்கும் பிரதமர் நன்றி தெரிவித்துக் கொண்டார். இந்தியாவின் நாடாளுமன்ற வரலாற்றில் இது, பொன்னான தருணமாக திகழும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

*மாநிலங்களவை*

மகளிர் இடஒதுக்கீட்டு மசோதா இன்று மாநிலங்களவையில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்திலும் மாநில சட்டமன்றங்களிலும், பெண்களுக்கு 33 சதவிகித இட ஒதுக்கீடு வழங்குவதற்கான, இந்த 128-ஆவது அரசியல் சாசன திருத்த மசோதாவை மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சர் திரு அர்ஜூன் ராம் மேக்வால், இன்று மாநிலங்களவையில் தாக்கல் செய்தார். நாரிசக்தி வந்தன் அதிநியம் என்று அழைக்கப்படும் இம்மசோதா, மக்களவையில் நேற்று நிறைவேற்றப்பட்டது. மாநிலங்களவையில் மசோதாவை தாக்கல் செய்து, அமைச்சர் திரு மேக்வால் பேசுகையில், நாட்டில் மகளிர் அதிகாரப் பங்கேற்பு, இம்மசோதாவினால் மேம்படும் என்றார். அமிர்த காலத்தில், முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்துவதற்கான முக்கியப் படியாகவும் இம்மசோதா திகழும் என்று அவர் தெரிவித்தார். பெண்களின் நலனுக்காக, உஜ்வாலா, முத்ரா போன்ற பல்வேறு திட்டங்களை பிரதமர் திரு நரேந்திர மோடி கொண்டு வந்து இருப்பதை அமைச்சர் பாராட்டினார். மகளிர் இடஒதுக்கீட்டு மசோதாவில், எஸ்சி-எஸ்டி பிரிவைச் சேர்ந்த பெண்களுக்கு, 33 சதவிகித உள் ஒதுக்கீடு வழங்கப்படும் என்றும், இதற்கு, மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் தொகுதி மறுவரையறை அவசியம் என்றும் அவர் கூறினார். பிஜேபி தலைவர் திரு ஜேபி நட்டா விவாதங்களில் பங்கேற்றுப் பேசுகையில் மகளிர் இடஒதுக்கீட்டு மசோதா மூலம் பெண்களின் அதிகாரப் பங்கேற்பை மேம்படுத்துவதே பாரதிய ஜனதாவின் குறிக்கோள் என்றும், இதில் அரசியல் நோக்கம் இல்லை என்றும் கூறினார். காங்கிரஸ் உறுப்பினர் திருமதி ரண்ஜித் ரஞ்சன், மசோதாவை ஆதரித்து பேசுகையில்

பெண்களுக்கான இடஒதுக்கீட்டை இன்னும் அதிகரிக்க வேண்டும் என்றார். மகளிர் இடஒதுக்கீட்டு மசோதாவைக் கொண்டு வருவதில் இவ்வளவு தாமதம் ஏன் என்றும் அவர் வினவினார். திரிணமுல் காங்கிரசைச் சேர்ந்த திருமதி டோலா சென், திமுக உறுப்பினர் டாக்டர் கனிமொழி சோமு, ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த திரு சந்தீப்குமார் பாதக் உள்ளிட்டவர்களும் விவாதங்களில் பங்கேற்றுப் பேசினர்.

*தன்கர்*

முன்னதாக, மாநிலங்களவை தலைவர் திரு ஜெகதீப் தன்கர், அவையில் பேசுகையில், மகளிர் இடஒதுக்கீட்டு மசோதா மீதான விவாதங்களின் போது, மாநிலங்களவையின் துணைத் தலைவர்களாக செயல்பட, 13 பெண் உறுப்பினர்கள் அடங்கிய பட்டியல் ஒன்றை அறிவித்தார். விவாதங்களின் போது அவைத் தலைவர் இருக்கையில் பெண் உறுப்பினர்கள் அமர்வதால் வரலாற்று சிறப்பு மிக்க இத்தருணத்தில் பெண்களுக்கு அளிக்கப்படும் முக்கியத் துவத்தை எடுத்துக் காட்டுவதாக அமையும் என்று அவர் கூறினார். மாநிலங்களவைத் தலைவர் அறிவித்த துணைத் தலைவர் பட்டியலில், ஜெயாபட்சன், சரோஜ் பாண்டே, சுலதா தேவ் உள்ளிட்ட பெண் உறுப்பினர்களின் பெயர்கள் இடம் பெற்றன.

*சந்திரயான்*

சந்திரயான்-3 விண்கலத்தின் வெற்றி உட்பட, விண்வெளித் துறையில் இந்தியாவின் பல்வேறு சாதனைகள் குறித்து, மக்களவையில் இன்று, விவாதம் நடைபெற்றது. பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், விவாதங்களை தொடக்கி வைத்துப் பேசுகையில், நிலவை எட்டுவதற்கான முயற்சியில் முன்னேறிய பல நாடுகள் தொடர்ந்து ஈடுபட்டு வரும் நிலையில், நிலவின் தென்துருவத்தின் தரையிறங்கிய முதலாவது நாடாக இந்தியா மேம்பட்டு இருப்பது, மிகப் பெரிய சாதனை என்றார். சந்திரயான்-3 விண்கலத்தின் வெற்றிக்கு பாடுபட்ட பெண் விஞ்ஞானிகள் உட்பட, இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகத்தின் அனைத்து விஞ்ஞானிகளுக்கும் வாழ்த்து தெரிவித்துக் கொள்வதாக அவர் கூறினார். அறிவியலும், கலாச்சாரமும்,

மனித குலத்தின் மேம்பாட்டிற்கான 2 முக்கியத் தேவைகள் என்றும் அவர் குறிப்பிட்டார். காங்கிரஸ் உறுப்பினர் திரு சசி தரூர், விவாதங்களில் பங்கேற்றுப் பேசுகையில் விண்வெளித் திட்டங்களால், தொலை தொடர்பு, வானிலை ஆராய்ச்சி உள்ளிட்ட பல துறைகள் பயன் பெறுவதை சுட்டிக் காட்டினார். இந்தியாவின் விண்வெளித் திட்டத்தில் முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேரு, மற்றும், விக்ரம் சாராபாய், சதீஷ் தவான் உள்ளிட்ட விஞ்ஞானிகளின் பங்களிப்பையும் அவர் நினைவு கூர்ந்தார்.சந்திரயான்-3 விண்கலத்தின் வெற்றி, பல்லாண்டு கால அறிவியல் முயற்சிகளின் பலனே தவிர, தனிநபர் வெற்றி அல்ல என்று, திரிணமுல் காங்கிரஸ் உறுப்பினர் பேராசிரியர் சவ்கதா ராய் கூறினார். திமுக உறுப்பினர் திரு அ ராசா உள்ளிட்டவர்களும் விவாதங்களில் பங்கேற்றுப் பேசினர்.

*தமிழ் ஒளி*

புதுச்சேரியில், மாநில அரசின் கலை-பண்பாட்டுத் துறையும், தஞ்சை தென்னக பண்பாட்டு மையமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள, கவிஞர் **தமிழ் ஒளி 100-ஆவது பிறந்த நாள் விழா**, கம்பன் கலையரங்கில் இன்று நடைபெறுகிறது. முதலமைச்சர் திரு ரங்கசாமி இவ்விழாவிற்கு தலைமை ஏற்று, கம்பன் புகழ் இலக்கிய விருது, நேரு குழந்தைகள் இலக்கிய விருது, மற்றும், தொல்காப்பியர் விருதுகளையும், விருதாளர்களுக்கு வழங்கிச் சிறப்பிக்கிறார். சட்டப் பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், கலை-பண்பாட்டுத் துறை அமைச்சர் திருமதி சந்திரப் பிரியங்கா உள்ளிட்டோர் விழாவில் பங்கேற்கிறார்கள்.

*புதுச்சேரி-சுற்றுலா*

மத்திய நிதி உதவியுடன் கூடிய **சுதேசி தர்ஷன்** திட்டத்தின் கீழ் புதுச்சேரியில் அமலாகும் பல்வேறு சுற்றுலா வளர்ச்சித் திட்டங்கள் குறித்து, மத்திய சுற்றுலாத் துறை அமைச்சர் திரு கிஷன்ரெட்டி, இன்று, காணொளி காட்சி மூலம் ஆய்வு செய்தார். முதல் கட்ட சுதேசி தர்ஷன் திட்டத்தின் கீழ்,

புதுச்சேரியில், கடற்கரை சுற்றுலா, பாரம்பரிய சுற்றுலா, மற்றும், ஆன்மிக சுற்றுலாவை மேம்படுத்த, மத்திய அரசு வழங்கிய 133.31 கோடி ரூபாய் முற்றிலும் செலவிடப் பட்டதாக, மாநில சுற்றுலா அமைச்சர் திரு லட்சுமி நாராயணன் இந்த ஆய்வின் போது எடுத்துக் கூறினார். 2-ஆம் கட்ட சுதேசி தர்ஷன் திட்டத்தின் கீழ், 150 கோடி ரூபாய் நிதி உதவி பெறுவதற்கான **மாஸ்டர் பிளான், லார்சன் அண்ட் டூப்ரோ** நிறுவனம் மூலமாகவும், **பிரசாத்** திட்டத்தின் கீழ், ஆன்மிகத் தலங்களின் மேம்பாட்டிற்கு 110 கோடி ரூபாய் நிதி உதவி பெறுவதற்கான **வரைவுத் திட்டம், தாராஷா நிறுவனம்** மூலமாகவும், தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

பல்கலைக் கூடம்

புதுச்சேரியில் 1 முதல் 12-ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் பயின்று, 10 சதவிகித இடஒதுக்கீட்டின் கீழ் மருத்துவக் கல்லூரியில் சேரும் மாணவர்களின் கல்விக் கட்டணத்தை அரசே செலுத்தும் என்று முதலமைச்சர் திரு ரங்கசாமி அறிவித்துள்ளார். இன்று புதுச்சேரியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மருத்துவ படிப்பிற்கான கட்டணத்தை செலுத்துவதில் அரசு பள்ளி மாணவர்களுக்கு சிரமங்கள் இருப்பதைக் கருத்தில் கொண்டு இவ்வாறு முடிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இதற்கிடையே, புதுச்சேரி பாரதியார் பல்கலைக் கூடத்தில் முதுகலை பட்டப்படிப்புகளைத் தொடக்க புதுவை பல்கலைக் கழகம் அனுமதி அளித்துள்ளது. முதலமைச்சர் திரு ரங்கசாமி, செய்தியாளர்களிடம் இதைத் தெரிவித்தார்.கலை பண்பாட்டுத் துறை அமைச்சர் திரு சந்திரப் பிரியங்கா, துணை செயலர் திரு நெடுஞ்செழியன், பாரதியார் பல்கலைக் கூடத்தின் பொறுப்பு முதல்வர் முனைவர் அன்னபூர்ணா உள்ளிட்டோர் உடன் இருந்தனர். பல்கலைக் கழக அனுமதியைத் தொடர்ந்து, பாரதியார் பல்கலைக் கூடத்தில், MPA இசை, MPA நாட்டியம், மற்றும், MPA நுண்கலை ஆகிய

ஒவ்வொரு பாடப் பிரிவிலும், நடப்பு கல்வியாண்டு முதலே, தலா 20 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர். BFA நுண்கலை பாடப் பிரிவில் மாணவர் சேர்க்கை இடங்களின் எண்ணிக்கையை, 30-ல் இருந்து 40-ஆக உயர்த்திக் கொள்ளவும் பல்கலைக்கழகம் அனுமதி அளித்துள்ளது.

இதனால் புதுச்சேரி மாணவர்களின் கலை ஆற்றல் பெருகி, உலக அளவிலான வேலை வாய்ப்புக்கு உத்தரவாதமாக அமையும் என்றும், புதுச்சேரி உயர்கல்வி கேந்திரமாக உருவெடுத்து இருப்பதற்கு இதுவே சான்றாகும் என்றும் அரசு செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

*தமிழிசை நீட்*

நீட் -பிஜி தேர்வில் பூஜ்யம் மதிப்பெண் எடுத்தவர்களுக்கும் முதுகலை மருத்துவப் படிப்பில் இடம் வழங்கப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது போல, தவறான விமர்சனம் வெளியிடுவோர், கட்-ஆப் மதிப்பெண், பூஜ்யம் பெர்சண்டைல் என்றால் என்ன என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டுமென, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன் கூறி உள்ளார். நீட்-பிஜி தேர்வில் அதிக பட்ச மதிப்பெண் பெற்றவர்களுக்கே, முதுகலை மாணவர் சேர்க்கையில் முன்னுரிமை அளிக்கப்படுவதாகவும், அத்தகைய இடங்கள் நிரம்பிய பின்னரும் காலியாக உள்ள இடங்களை நிரப்புவதில், குறைவான கட்-ஆப் மதிப் பெண் பெற்றவர்களும் பயன்பெற ஏதுவாகவே, புதிய முறையை மத்திய அரசு கொண்டுவந்துள்ளதாகவும் அறிக்கை ஒன்றில் அவர் தெரிவித்துள்ளார். நீட் தேர்வில், பூஜ்ய மதிப்பெண் பெற்றவர்களுக்கு, மருத்துவ படிப்பில் நிச்சயம் இடம் கிடைக்காது என்றும் நீட் தேர்வை எதிர்ப்பவர்கள் மட்டுமே, தவறாக அப்படி சொல்லிக் கொண்டு இருப்பதாகவும் அவர் கூறி உள்ளார்.

தமிழிசை-சுத்தம்

கிராம மேம்பாட்டுப் பணிகளுக்காக அண்மையில் பத்மஸ்ரீ விருது பெற்ற கிராமாலயா தாமோதரன், மற்றும் கார்ப்பரேட் நிறுவனம் ஒன்றின் சார்பில், புதுச்சேரியில் இன்று நடைபெற்ற பள்ளி மாணவர்களுக்கான, சுகாதாரக் கல்வி நிகழ்ச்சியை, துணை நிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன் தொடக்கி வைத்தார். பிரதமர் திரு நரேந்தி மோடியின் ஸ்வச் பாரத் இயக்கத்தினால், பல்வேறு நோய்கள் தடுக்கப்பட்டு, முதல் ஆண்டிலேயே, 16 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு தவிர்க்கப் பட்டுள்ளதாகவும், கைகளை சுத்தமாக பராமரிப்பதால் ஆரோக்கியமாக வாழ முடியும் என்பதை மாணவர்களுக்கு சொல்லிக் கொடுப்பதே இந்நிகழ்ச்சியின் நோக்கம் என்றும் அவர் கூறினார். திறந்த வெளி கழிப்பிடங்களே இல்லாத மாநிலங்களின் பட்டியலில் புதுச்சேரி முன்னிலையில் இருப்பதையும் முதலமைச்சர், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள், இதற்காக தொடர்ந்து பாடுபட்டு வருவதையும் தாம் பாராட்டுவதாக துணை நிலை ஆளுநர் மேலும் குறிப்பிட்டார்.

டெங்கு

புதுச்சேரியில் எந்த ஒரு பகுதியிலும் கொசுத் தொல்லை அதிகரித்தல் மற்றும், டெங்கு பரவல் குறித்து, பொது மக்கள், 104 என்ற தொலை பேசி எண்ணைத் தொடர்பு கொண்டு அவசர உதவி கோரலாம் என்று சுகாதாரத் துறை அறிவித்துள்ளது. டெங்கு காய்ச்சலை ஏற்படுத்தும் ஏடிஸ் வகை கொசுக்களின் உற்பத்தியை தடுக்கவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கவும், உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதால், டெங்கு மற்றும் சிக்கன்குனியா இல்லாத மாநிலமாக புதுச்சேரியை மேம்படுத்துவதில், பொது மக்களும் முழுமையாக ஒத்துழைக்க வேண்டும் என,சுகாதாரத் துறை கேட்டுக் கொண்டுள்ளது.

உழவர்கரை

உழவர்கரை நகராட்சிக்கு உட்பட்ட கம்பன் நகர், சண்முகா நகர், முகாம்பிகை நகர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில், பொதுப் பணித் துறையால் சாலைகள் புதுப்பிக்கப்பட உள்ளதால், இப்பகுதிகளில்,குடிநீர், கழிவுநீர் மற்றும் மின் இணைப்பு பெற விரும்புவோர், வரும் 30-ஆம் தேதிக்குள் உரிய அனுமதி பெற்று வேலைகளை முடித்துக் கொள்ள வேண்டும் என நகராட்சி நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது. தவறினால் 3 ஆண்டு காலத்திற்குள், எந்த விதமான அனுமதியும் வழங்கப்பட மாட்டாது என்றும் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

மகளிர் இடஒதுக்கீட்டு மசோதா மக்களவையில் நிறைவேற்றப் பட்டுள்ளதால், பெண்களுக்கு புதிய ஆற்றலும், நம்பிக்கையும் கிடைக்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

மகளிர் இடஒதுக்கீட்டு மசோதா இன்று மாநிலங்களவையில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

**சுதேசி தர்ஷன்** திட்டத்தின் கீழ் புதுச்சேரியில் அமலாகும் சுற்றுலா வளர்ச்சித் திட்டங்களை, மத்திய அமைச்சர் திரு கிஷன்ரெட்டி, இன்று, காணொளி காட்சி மூலம் ஆய்வு செய்தார்.

புதுச்சேரியில், 10 சதவிகித இடஒதுக்கீட்டின் கீழ் மருத்துவக் கல்லூரியில் சேரும் அரசுப் பள்ளி மாணவர்களின் கல்விக் கட்டணத்தை அரசே செலுத்தும் என்று முதலமைச்சர் திரு ரங்கசாமி அறிவித்துள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

-------------------------